#பிராமணர்களும் #பசும்பொன் #முத்துராமலிங்கத் #தேவரும்

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரை மிகவும் மதிக்கக்கூடியது போலவும் அவரை இந்து மதத்தின் ஒரு அடையாளம் போலவும் உருவாக்கப்படுவதில் பிராமண சக்திகள் வெற்றி கண்டுள்ளன.ஆனால் உண்மை என்ன? பிராமண சக்திகள் முத்துராமலிங்கத்தேவரை உயர்த்திப் பிடிப்பதன் காரணம் என்ன?

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் நடத்திய அரிசன நுழைவு போராட்டம் நீங்கள் அனைவரும் அறிந்ததே .
ஆனால் அது எந்த சமூகத்திற்கு எதிராக, எந்த சமூகத்தின் ஆதிக்கத்திற்கு அறைகூவலாக நடந்தது என்பதை அறிவீர்களா?

நிச்சயமாக அது பிராமண சாதிக்கு எதிராக நடத்தப்பட்ட ஒரு நுழைவு போராட்டம்.
வைத்தியநாத ஐயர் அந்த அரிசன நுழைவு போராட்டத்திற்கு தலைமை ஏற்ற பொழுதும் தன்னால் அதை சாதிக்க இயலாது என்று எண்ணியே பின்வாங்கினார்.

(இந்த வைத்தியநாத ஐயர் இறந்தபோது அவரது இறப்பிற்கு செல்லாமலும் சடங்குகளை செய்யாமலும் பிராமண சமூகங்கள் புறக்கணித்தன என்பதிலிருந்தே தங்கள் சொந்த சாதியினர் மீது, கூட அவர்கள் எவ்வளவு வஞ்சினம் கொண்டிருந்தார்கள் என்பதை உணருங்கள்).

இதன் காரணமாக பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அந்த போராட்டத்திற்கு உறுதுணையாக துண்டறிக்கை வெளியிட்டார். அந்த துண்டறிக்கையில் #சனாதனவாதிகளுக்கு #எச்சரிக்கை என்று தலைப்பிட்டு, அன்னை மீனாட்சியின் கோயிலிலே ஹரிஜனங்களை கூட்டி வரும் பொழுது எவரேனும் தடுக்க முயன்றால் அவர்களை  தக்க வழியில் நானும் எனது சமூகமும் சந்திக்கும் என்று அறைகூவல் விடுத்தார்

மீனாட்சி அம்மன் கோவிலில் அர்ச்சகராக இருந்த பிராமணர்கள் அந்த போராட்ட தினத்தன்று முழுமையாக வேலை நிறுத்தம் செய்தனர். எந்த அர்ச்சகரும் கோயிலில் இல்லை. முத்துராமலிங்கத் தேவர் திருச்சுழியிலிருந்து இரண்டு வேளாளர் சமூகத்தைச் சேர்ந்த பூசாரிகளை கொண்டு மீனாட்சி அம்மன் கோவிலில், பூசனைகள் செய்தார் .

ஆண்டாண்டு காலமாய் வழக்கத்திலிருந்த பிராமணர்களின் பூசையை உடைத்து வேளாளர் சமூகத்தின் பூசையை நடத்திக் காட்டி இதில் அவர் வெற்றி கண்டார் .இதில் எதிர்பாராத விதமாக அந்த இரண்டு பூசாரிகள் ஒருவர் என்ன காரணம் என்று தெரியாமலே மரணித்தார். அப்பொழுது பசும்பொன் முத்துராமலிங்க தேவர் தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களிடையே பீதியை கிளப்ப கூடிய இத்தகைய தாக்குதல்கள் தொடருமாயின் அவர்கள் பூண்டோடு அழிக்கப்படுவார்கள் என்று நேரடியாக எச்சரிக்கை விட்டார்.
மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் இருந்து வெளியேறிய பட்டர்கள்
டிவிஎஸ் நிறுவனத்தாரின் இடத்தில் ஒரு மீனாட்சி அம்மனின் வெண்கலச் சிலையை வைத்து பூசை தொடர்ந்தார்கள். அச்சமயத்தில் தங்களுடைய ஆண்டாண்டு கால உரிமையை உடைத்து நொறுக்கிய பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மீது வஞ்சினம் கொண்டனர் .இது வரலாற்றில் பதியப்பட்ட உண்மை பசும்பொன் முத்துராமலிங்க தேவர்  நுழைவு போராட்டம் நடத்தியது மட்டுமே நினைவு கொள்ளப்படக்கூடிய இந்த வேளையில், அது யாருக்கு எதிராக நடந்தது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும் .

இந்த அரிசன நுழைவு போராட்டமே ஒரு காலத்தில் தேவர் அவர்களுக்கு எதிராக பிராமண அதிகாரிகளை ஒருங்கிணைத்தது.

ராமநாதபுரம் பரமக்குடி கலவரத்தில் கலவரம் நடந்து ஐந்து நாட்களுக்கு அப்புறம் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மீது எப்ஐஆர் பதிவதற்கு மதுரையில் காவல் உயர் அதிகாரியாக மற்றும் கலெக்டராக இருந்த பிராமண சக்திகள் காமராஜருக்கு அறிவுறுத்தினார்.

இது மட்டுமல்ல பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் பல்வேறு மேடைப்பேச்சுகள் மிக அதிக அளவில் நடைபெற்ற இடம் #காஞ்சிபுரம். ஆனால் அங்கு அவர் ராமலிங்க சுவாமிகளின் வழிபாட்டு முறையையும் மார்க்க முறைகளையும் உயர்த்திப் பிரச்சாரம் செய்தார் .

ராமலிங்க சுவாமிகளின் நெறிமுறை என்பது சங்கரமடத்திற்கு முழுக்க எதிரானது.

காஞ்சி சங்கரமடத்திற்கு  எதிராக ராமலிங்க அடிகளாரும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரும் தங்களின் நெறிமுறையை வளர்த்தனர் இது முழுக்க முழுக்க நிதர்சனமான உண்மை.ஒரு உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால் அது  முத்துராமலிங்கதேவர்  ஆதினங்களுடனும்

பண்டாரங்கள் உடனும் சைவத்திருமுறை அடியார்களுடன் உள்ள புகைப்படங்களை நீங்கள் காணலாம்.
ஆனால் காஞ்சிபுரத்திலேயே அதிக அளவில் தன்னுடைய அரசியல் ஆன்மீக பணிகளை மேற்கொண்ட முத்துராமலிங்க தேவர் காஞ்சி சங்கர மடத்தின் மடாதிபதிகள் என்று கூறப்படும் எவருடனும் அவரது புகைப்படம் இன்றுவரை இல்லை இது ஒன்றே பசும்பொன் முத்துராமலிங்க தேவர் பிராமண சக்தியான காஞ்சி மடத்திற்கு எதிராக இருந்தார் என்பதற்கு சான்றாகும்.

ஆனால் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் சிறையடைப்பு மற்றும் தொடர்ச்சியான அவரது மரணம் இவற்றிற்கு பின் தங்கள் மீது ஏதேனும் சந்தேகம் வந்து விடுமோ என்ற அச்சத்தில் பிராமண சமூகம் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரை தங்களுடைய இந்து மதத்தின் அடையாளமாக மாற்ற தொடங்கியுள்ளனர். இது மட்டுமல்லாது வள்ளலார், ராமலிங்க அடிகளார், தேவர்களது குரு வல்லநாட்டு சித்தர் போன்றோருடைய மரணமும் புதிரான ஒன்றே .

இந்த பிராமண சக்தியானது சமூகத்தில் பெரும்பான்மையான மாற்றுக் கருத்துடையவரை அழிப்பதிலும், பின்னர் அவர்களையே தங்களுடைய அடையாளமாக மாற்றுவதிலும் வல்லமை படைத்தது.
.
,இந்து மதத்திற்கு எதிராக போர்க்கொடி உயர்த்திய அண்ணல் அம்பேத்கரையும் இவர்கள் சமஸ்கிருத ஆதரவாளராக கடந்த 20 ஆண்டுகளில் கட்டமைத்து விட்டார்கள்.

முக்குலத்து சொந்தங்களே உங்களுக்கு வேண்டுமென்றால் நீங்கள் வீரப்பரம்பரை ஆண்ட பரம்பரை சத்திரிய குலம் என்று கூறிக் கொள்ளலாம். ஆனால் பிராமணர்களை பொறுத்தவரை பொறுத்தவரை நாம் நீச சாதியினரே.

நம்முடைய வழிபாட்டு முறைகள் சைவ வைணவ முருக வழிபாடு .
இறைவனை, நம்முடைய குலதெய்வங்களை நம்முடைய விருப்பபடி வணங்கும் முறை உடையவர்கள், நாம்.
நாம் இறைவனை வணங்குவதற்கு எவ்வித கட்டுப்பாடும் அல்லாத நடைமுறை நம்முடையது இறைவன் முன்னால் நாம் எத்தகைய நிலையிலும் புனிதமானவர்கள் என்று கூறக்கூடிய உயரிய வழிபாட்டு முறை நம்முடையது.

ஆனால் பிராமணர்களை பொறுத்தவரை அவாளைத் தவிர மற்ற அனைவரும் இறைவழிபாட்டை பூசை தொடர்வதற்குத் தகுதிஅற்றவர்கள். உடலுழைப்பற்ற ஒரு சோம்பேறி சமூகம் உளவியல் ரீதியாக நம்முடைய மக்களை நம்முடைய இறைவனிடத்திலிருந்து நம்மை தூர வைத்து குறைத்துக் கொண்டிருக்கிறது உண்மை உணர்வோம், இவர்களின் சதி செயலில் சிக்காமல் நம்முடைய அரசியல் கட்டமைப்பை உருவாக்குவோம்

- Suresh Pandian